**Before the National Green Tribunal South Zone Chennai**

**Original Application No 80of 2021**

**IN THE MATTER OF**

Tribunal on its own motion *suo moto* based on the newitem in the Times of India Newspaper, Coimbatore Edition addition dt. 14.02.2021, "*stench from check dam makes life miserable*"

Applicant

**Versus**

*The Principal Secretary to Government*

*Public Works Department Chennai and others*

Respondents

---

**Report bythe secondrespondent,Mr K Abdullah, GudalurTown Panchayat Executive Officer**

---

I, Mr K Abdullah son of Mr Kaja Mohaideen, aged 58 years, Executive Officer at the secondRespondent Town Panchayat having office at Nehru Nagar, Samy Chetti PalayamCoimbatore 641047 report as follows:

1. Second Respondent town panchayat is 20 kilometres away from Coimbatore city, in the state of Tamil Nadu. According 2011 census, total population in this town panchayat were around 37,000 Current population is around 56000, 18 wards. There are nearly 15500 houses in this town panchayat.

2. I submit to the Hon'ble Tribunal that our town panchayat is strictly adhering to the solid waste management rules. Our town panchayat has 15 regular fulltime staff and 91 self-help group members in order to collect domestic and commercial wastegenerated nearly 4.750 metric tonne on daily basis from Monday to Saturday every week. Following vehicles are engaged for the above:

Tractors: Two

Van: Two (Tata Ace)

Battery operated: Two; and two hired tractors.

3. I humbly submit that the collected waste is taken to the Resource Recovery Park, where the waste is segregated into bio-degradable and non-biodegradable. Bio-degradable waste sold as manure to farmers at large quantity and smaller quantities are sold to residents, who have garden at their houses. Non-biodegradable waste, such as plastics and bottles are sold to traders'at large quantity. This process is generating little income to our town panchayat.

4. I humbly submit that, our town panchayat's policy in relation to planning permission for building houses mandate since 2000,that an applicant should have septic tank and rainwater harvest facility at their proposed building site. Furthermore, every applicant should construct soak pit at their house in order to drain their domestic wastewater. If these conditions are not met with the applicant, no permission will be granted by our town panchayat.

5. I humbly submit that the liquid and solid waste collected from septic tanks were taken to Faecal Sludge Treatment Plant at Ward 5, Athi Palayam Road Resource Recovery Park. Total area of this park is 1.5 acres and its per day capacity is 25000 KLD. This treatment plant commenced its operation since 2018. This project was funded Bill and Melinda Gates Foundation. Recycled water from this plant is used for the nearby park.

6. I I humbly submit that in order to treat the water runs through EzhuErumai Odai, which is situated in our town panchayat, a scheme has been approved by the Government, which is known as *Bio-remediation Techniques Phytoremediation Constructed with Wetlands.* Total cost for this project is Rs12 lakhs and construction is currently ongoing at present. (Please see the annexed document in Tamil and the Photos). This project will cover V.K.V Nagar, Thirumalai NaickenPalayam and R.V Nagar, which are the major areas in our town panchayat. This project consists of three pits.

7. I humbly submit that our town panchayat is included in "Cauvery Rejuvenation Project" and Rs 7.70 crore is allocated in order to establish treatment plant.

8. I respectfully submit that, often domestic wastewater at a small quantity is being mixed with the stream water. Our town panchayat is taking all necessary steps to prevent domestic wastewater is being mixed with stream water. It is important to note, most of the time, only rainwater runs in EzhuErumaiPallam.

9. I humbly submit to the Tribunal, that when the undergoing project is completed, no wastewater will be discharged into the mainstream.

Hence, in the above circumstances, it is respectfully prayed that the National Green Tribunal South Zone may be pleased to pass orders or other orders may be deemed fit and proper according to the circumstances and thus render justice.

Signed: [signature]

Date: 26.11.2021

Verification

I, MrK Abdullah, Executive Officer at the secondrespondent herein do hereby verified the contents of this Report and they are true to my personal knowledge based on the records and I have not supressed any facts.

Signature: [signature]

Official stamp:

EXECUTIVE OFFICER
GUDALUR TOWN PANCHAYAT
COIMBATORE - 641 020

அனுப்புநர் :
திரு.கா.அப்துல்லா,
செயல் அலுவலர் (பொ),
கூடலூர் பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641047.

பெறுநர்:

பேரூராட்சிகளின் ஆணையர் அவர்கள்,
7வது மற்றும் 8வது தளம்,
நகர் நிர்வாக அலுவலக கட்டிடம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28
வழி:-

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கோயம்புத்தூர்–18.

**ந.க.எண்:642/2021/அ, நாள்:19.11.2021**

அய்யா,

பொருள் : வழக்கு – தேசிய பசுமை தீர்பாயம் – கோயம்புத்தூர் மாவட்டம் – கூடலூர் பேரூராட்சி –பெரியபள்ளம் ஓடையில் கழிவுநீர் செல்வது – தேசிய பசுமை தீர்பாயம் அசல் விண்ணப்பம் எண்.80 of 2021 (SZ) மீது நாளது தேதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. தேசிய பசுமை தீர்ப்பாயம் விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.14.02.2021.
2. தேசிய பசுமை தீர்பாயம் தெற்கு மண்டலம், சென்னை விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.19.05.2021
3. தேசிய பசுமை தீர்ப்பாயம் தெற்கு மண்டலம், சென்னை விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.07.08.2021.
4. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மு.மூஎண்.1048/2021/பே1 நாள்.17.08.2021
5. கூடலூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் நாள்.11.10.2021
6. கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1500/2021/பே1, நாள்.13.10.2021

* * * * *

பார்வை 1–ல் காணும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் விண்ணப்பத்தில் எண்.4 வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட சிவா நகர் பகுதிக்கு அருகில் உள்ள ஒடையில் செல்லும் கழிவுநீரால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு, நோய்தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்து 14.02.2021 ஆம் தேதிய Times of India நாளிதழ் "Stench from check dam make life miserable" என்ற செய்தி வெளியானதின் அடிப்படையில் தேசிய பசுமை தீர்பாயம் தானாக முன்வந்து அசல் விண்ணப்பம் எண்.80/2021(SZ) நாள்.14.02.2021–ன்படியான உத்திரவில் இப்பொருள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது துணை ஆட்சியர் பதவிக்கு குறையாத பதவியில் உள்ள அலுவலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் மற்றும் நீர்வள ஆதார அமைப்பு அலுவலர் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலரை கொண்டு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொண்டு 16.04.2021 ஆம் தேதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து ஏழு எருமை பள்ளம் வழியாக , கூடலூர் பேரூராட்சி தென்புற பகுதி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அனைத்து பகுதியில் உள்ள கழிவுநீர் ஏழு எருமை பள்ளம் வழியாக பூகோள ரீதியாக அமையப்பெற்று இப்பேரூராட்சி வழியாக சென்று எண்.4 வீரபாண்டி பேரூராட்சி, பிளிச்சி கிராம ஊராட்சி, சிக்காரம்பாளையம் கிராம ஊராட்சி, காரமடை ஊராட்சி ஒன்றிய வழியாக, சிறுமுகை பேரூராட்சி பகுதியில் உள்ள பவானி ஆற்றுப்படுகையில் நீர் செல்லத்தக்க வகையில் அமையப்பெற்றுள்ளது.

மேற்படி ஓடை வழியாக மழை காலங்களை தவிர மற்ற நாட்களில் கழிவுநீர் மட்டுமே அதிக்கப்படியாக இவ்வோடையில் கூடலூர் பேரூராட்சியில் 15500 குடியிருப்புகள், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 9500 குடியிருப்புகள் அமையப்பெற்றுள்ள பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரானது, மேற்காணும் நீர்வழித்தடம் ஓடை வழியாக பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியபள்ளம் ஓடை வழியாக எண்.4 வீரபாண்டி பேரூராட்சி வழியாக செல்கிறது.

மேலும் மேற்படி ஓடையில் செல்லும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய **நடந்தாய்வாழி காவேரி"** திட்டத்தில் இப்பேரூராட்சியை சுற்றியுள்ள கூடலூர் பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.7.70 கோடி, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.5.50 கோடி மற்றும் எண்.4 வீரபாண்டி பேரூராட்சிக்கு மதிப்பீடு ரூ.3.30 கோடியிலும், அந்தந்த உள்ளாட்சி பகுதியில் சேகரம் ஆகும் மொத்த கழிவுநீரையும் சுத்திகரிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்ட நீரினை அப்பகுதிகளின் வழியாக வரும் இவ்வோடையிலேயே கலக்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு மைய திட்டத்தில் அமையப்பெற்றுள்ளது.

மேலும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் மனுவில் சுட்டிக்காட்டியுள்ள இப்பேரூராட்சி வழியாக செல்லும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய **"நடந்தாய்வாழி காவேரி"** திட்டத்தில் பணிமேற்கொள்ளப்படும் காலம் வரை, தற்போது தற்காலிக ஏற்படாக பேரூராட்சியின் மூலம் சுத்திகரிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் தேசிய பசுமை தீர்பாயத்தின் அசல் விண்ணபத்தில் கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட பெரியபள்ளம் ஓடையில் செல்லும் கழிவுநீர் தொடர்பாக 27.08.2021-ம் தேதி காலை 10.30 மணிக்கு காணொளி தொலைக்காட்சி மூலம் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன்பாளையம் மற்றும் ஆர்.வி. நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்க ரூ.12.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள பார்வை-4ல் கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிருவாக அனுமதி பெறப்பட்டு, 16.11.2021ல் டெண்டர் விடப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. 30.01.2022க்குள் இப்பணியானது முடிவடையும் என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பித்து கொள்கிறேன்.

9/11/2021

செயல் அலுவலர்,
கூடலூர் பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641047.

## கூடலூர் பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.கா.அப்துல்லா

ந.க.எண்:544/2021/அ நாள்: 17.11.2021

பொருள்: பணிகள் – 2020–21 ஆம் ஆண்டு பொது நிதி – கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன் பாளையம் மற்றும் ஆர்.வி. நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டுதல் பணி செய்ய உத்திரவிடப்படுகிறது.

பார்வை: 1. கூடலூர் பேரூராட்சி தனி அலுவலர் / பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.1500/2021/பே1, நாள்.13.10.2021
2.உ.செ.பொ.எண்(பே.).எண். /21–22, நாள். .10.2021 மூலம் உதவி செயற் பொறியாளர் (பேரூராட்சிகள்) கோவை அவர்களால் அளிக்கப்பட்ட தொழில்நுட்பஅங்கீகாரம்.
3. கூடலூர் பேரூராட்சியின் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் நாள்.01.11.2021
4.ஒப்பந்ததாரர் திருமதி.எம்.ரத்தினம் மற்றும் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.பிரேமாவதி ஆகியோர்களின் ஒப்பந்தபுள்ளி நாள்.16.11.2021
5. கூடலூர் பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.16.11.2021

**உத்தரவு:**

பார்வை 1 ல் காணும் கூடலூர் பேரூராட்சி மன்ற தனி அலுவலர் / பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் நிர்வாக அனுமதியின் படி, கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன் பாளையம் மற்றும் ஆர்.வி. நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டுதல் பணிக்கு ரூ.12,00,000/-க்கு நிர்வாக அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

பார்வை 2ல் காணும் உ.செ.பொ(பே.) எண். /21–22, நாள். .10.2021ன்மூலம் மேற்படி பணிக்கு உதவிசெயற் பொறியாளர் (பேரூராட்சிகள்) கோவை அவர்களால் தொழில்நுட்பஅங்கீகாரம் அளிக்கப்பட்டது.

பார்வை 3ல் காணும் கூடலூர் பேரூராட்சியின் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் நாள்.01.11.2021 மூலம் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது

பார்வை 4ல் கண்டுள்ளபடி 23.02.2021அன்று ஒப்பந்ததாரர்கள் திருமதி.எம்.ரத்தினம் மற்றும் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.பிரேமாவதி ஆகியோர்களிடம் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளை ஒப்பு நோக்கியதில் மதிப்பீட்டுத் தொகையில் 4.95% அதிகமாக உள்ள திருமதி.எம்.ரத்தினம் அவர்களின் ஒப்பந்தபுள்ளி குறைந்த ஒப்பந்தபுள்ளியாக உள்ளதால், இதனை கூடலூர் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுடன் ஏற்றுகொள்ள கூடலூர் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது.

பார்வை 5ல் கண்டுள்ள கூடலூர் பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.16.11.2021 மூலம் குறைந்த ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

ஆதாலால் கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன் பாளையம் மற்றும் ஆர்.வி. நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டுதல் பணியை (மதிப்பீடு ரூ.12,00,000/–) திருமதி.எம்.ரத்தினம் என்பவருக்கு மதிப்பீட்டுத் தொகையில் 4.95% அதிகமாக செய்து கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்தரவு வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. ஒப்பந்ததாரர் ரூ.20.00 மதிப்புள்ள சபா காகிதத்தில் காண்ட்ராக்ட் சம்பந்தமான முழுவிபரங்கள் அடங்கிய ஓர் உடன்படிக்கை இவ்வலுவலகத்தில் எழுதிக்கொடுக்க வேண்டும்.
2. ஒப்பந்தாரர் வேலை ஆரம்பிப்பதற்கு முன்பு தொகுதி பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு தெரிவித்தும், வேலை ஆரம்பிக்கும் முன்பும், வேலைச் செய்யும் போதும் மற்றும் வேலை செய்து முடிக்கும் போதும் புகைப்படங்கள் எடுத்து பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.

3. உத்திரவு கிடைக்கப்பெற்ற 90 தினத்திற்குள் வேலையை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடிக்கா விட்டால் வேலைக்கான மேற்படியாரின் டெண்டரை ரத்து செய்து டெண்டர் டேவணித் தொகைகைய பறிமுதல் செய்தும் மறு டெண்டர் கோர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் மேற்படி டெண்டர்தாரரே பொறுப்பாவார்.

4. டெண்டர் சம்பந்தமான விவரங்களுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஒப்பந்ததாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

5. வேலை முடித்தப் பின்பு தொகுதி பொறியாளர் காரமடை பேரூராட்சி மற்றும் உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) கோவை அவர்களால் அளவு மற்றும் மேலளவு செய்த பின்னர் பேரூராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தொகைகள் வழங்கப்படும்.

6. ஒப்பந்ததாரர் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவுகளில் மட்டுமே வேலையைச் செய்ய வேண்டும்.

7. செயல் அலுவலர் ஆய்வு செய்யும் போது வேலைகள் தரம் குறைந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

8. ஒப்பந்ததாரர் வேலையைச் செய்யும் போது சரியான லெவலிலும், நல்லமுறையிலும், சுத்தமாகவும் செய்யப்பட வேண்டும்.

9. ஒப்பந்ததாரர் வேலைச் செய்யும் போது வேலையின் ஒவ்வொரு நிலையிலும் செயல் அலுவலரிடம் தெரியப்படுத்த வேண்டும்.

10. பொது மக்களின் போக்குவரத்திற்கும் மற்றும் இதர வகைகளிலும் எவ்வித இடையூறுமில்லாமல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொது மக்களிடமிருந்து பணிகளின் தரம் குறித்து புகார்கள் வரா வண்ணம் பணிகள் தரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
கூடலூர் பேரூராட்சி
கோயம்புத்தூர்–47.

பெறுதல்:
**திருமதி.எம்.ரத்தினம்**
ஒப்பந்ததாரர்
கோவை

நகல்: தொகுதி பொறியாளர், காரமடை பேரூராட்சி

---- IMG-20211124-WA0001.jpg

கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.கோ.துவாரகநாத்சிங்

ந.க.எண்.1500/2021/பே1 நாள். 13.10.2021

பொருள் : பொதுநிதி 2021–2022 – பேரூராட்சிகள் நிர்வாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – கூடலூர் பேரூராட்சி – அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளுதல் – நிர்வாக அனுமதி அளித்து ஆணை பிறப்பித்தல் தொடர்பாக

பார்வை :
1. தனி அலுவலர், கூடலூர் பேரூராட்சி அவர்களின் மன்ற தீர்மான எண். 48/2021 நாள்.13.10.2021
2. கூடலூர் பேரூராட்சி செயல் அலுவலரது கடிதம் ந.க.எண்.544/2021/அ1 நாள்.13.10.2021
3. அரசாணை (ப) எண்.166 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 08.04.2008.

----

உத்திரவு :

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் பேரூராட்சியில் பார்வை1–ல் காணும் விவரப்படி தனி அலுவலர், கூடலூர் பேரூராட்சி அவர்களின் மன்ற அனுமதி மற்றும் பார்வை 2–ல் காணும் செயல் அலுவலரது முன்மொழிவு ஆகியவற்றின் பேரில், 2021–2022 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தில் பின்வரும் பணியினை மேற்கொள்வதற்கு, பார்வை 3–ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் நிர்வாக அனுமதி அளித்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (இலட்ச த்தில்) |
|---|---|---|
| 1. | கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன்பாளையம் மற்றும் ஆர்.வி.நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டுதல். | 12.00 |

நிபந்தனைகள் :

1 இப்பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உதவி செயற்பொறியாளரிடம் தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

2 இப்பணி விபரங்களை பேரூராட்சியின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு பதிவேடு மற்றும் திட்டப் பேரேடு ஆகியவற்றில் பதிவு செய்யப்பட வேண்டும்

3 1998 ஆம் வருடத்திய தமிழ்நாடு ஒழிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் 2000ம் வருடத்திய தமிழ்நாடு ஒழிவு மறைவற்ற ஒப்பந்த விதிகள் ஆகியவற்றின் தொகுத்தளிக்கப்பட்ட நடைமுறைகளை தவறாமல் பின்பற்றி, இப்பணியினை செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தீர்வு செய்யப்பட வேண்டும்.

4 ஒரு ஒப்பந்தப்புள்ளி பெற்று முடிவு செய்யப்படுவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

5 பேரூராட்சி மன்ற நிர்வாகிகளின் உறவினர்களுக்கு ( தாய் ,தந்தை, சகோதரன், மனைவி, சகோதரி முதலானவர்கள்) பணிகள் ஒப்படைப்பதை தவிர்க்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியின் மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.

7 இப்பணியானது சம்மந்தப்பட்ட பேரூராட்சிக்கு சொந்தமான அல்லது மேவியுள்ள புறம்போக்கு நிலத்தில் மட்டுமே நடைபெறுவதை செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் உறுதி செய்ய வேண்டும்.

8 இப்பணிகளுக்கான செலவினம் மேற்கொள்வதற்கு இப்பேரூராட்சியின் நடப்பாண்டு வரவு செலவு திட்டத்தில் க.கு.எண்.2040–ல் உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை செயல் அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

9 இந்த அனுமதியின் மூலம் உருவாக்கப்படும் மூலதன சொத்துக்களை முறையாக சொத்தாக்கம் செய்யப்பட வேண்டும்.

10 இப்பணியின் பொருட்டு எதிர்காலத்தில் தணிக்கையில் தடைகள் ஏதேனும் எழுப்பப்படின் அத்தகைய தடைகளுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைமுறைநூல் தொகுதி 2–ல் குறித்துரைக்கப்பட்ட விகிதாச்சாரப்படி சம்மந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களே பொறுப்பாவார்கள்.

11 இப்பணி மேற்கொள்வதினால் சட்ட ரீதியான சிக்கல்கள் எழும்பட்சத்திலும், நீதி மன்ற உத்தரவு நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் பட்சத்திலும் அல்லது இன்னபிற காரணங்களுக்காகவும் இந்த ஆணையினை ரத்து செய்வதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

12 இப்பணி துவங்கும் முன்னர், நடைபெறும் போது மற்றும் முடிவுற்ற பின்னர் ஆகிய மூன்று நிலைகளில் வண்ணப் புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தப்படவேண்டும்.

13 எந்தவொரு வேலைக்கும் முன்பணம் கட்டாயம் வழங்கக் கூடாது

14 இவ்வாணையின் விவரங்கள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் நிர்வாக அனுமதி வழங்கும் பதிவேடு பக்கம் எண். 76 முதல் 95 –ல் பதியப்பட்டுள்ளது.

15 இதில் முரண்படும் செயல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
கோயம்புத்தூர் மண்டலம்.

பெறுநர் :
செயல் அலுவலர்,
கூடலூர் பேரூராட்சி.

நகல் : உதவி செயற் பொறியாளர், (பேரூராட்சிகள்), கோயம்புத்தூர் மண்டலம்.
நகல் : இளம்/உதவி பொறியாளர், கூடலூர் பேரூராட்சி




## கோயம்புத்தூர் மாவட்டம் – கூடலூர் பேரூராட்சி

**பொதுநிதி – 2021–2022**

வேலையின் பெயர் : கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட வி.கே.வி நகர், திருமலைநாயக்கன்பாளையம் மற்றும் ஆர்.வி. நகர் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டுதல்.

மதிப்பீடு : ரூ.12.00இலட்சம்

## கூடலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு/திருமதி. கா.அப்துல்லா

ந.க.எண் : **841/2021/B** நாள்:**23-11-2021**

க.உரிமம்.எண்:103 /2021–2022

பொருள்: கட்டிட உரிமம் கூடலூர் பேரூராட்சி வார்டு எண் : **WD-15**, ஜென் கார்டன் கட்டிட சர்வே எண் : **405/1A1A**, மனை எண் : **6 West Part** –ல் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை:

திரு/திருமதி : வ.முருகேசன், பே.உதயலட்சுமி த/பெ,க/பெ :வரதராஜ், முருகேசன் என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண் :104 நாள் :26–10–2021

ஆணை:

கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண் : **405/1A1A**, மனை எண் : **6 West Part** – ல் , திரு/திருமதி : வ.முருகேசன், பே.உதயலட்சுமி ., த/பெ,க/பெ : வரதராஜ், முருகேசன் என்பவர் தரைதளம் 1000.00 ச.மீ / ச.அ , தார்சு கட்டிடம் கட்டிக்கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார். வரைபடம் நகல் சமர்ப்பித்துள்ளார்.

விண்ணப்பம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி **23-11-2021** முதல் ஐந்து வருட காலத்திற்கு அதாவது **22-11-2026** வரை அமுலில் இருக்கும்.
2. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை கட்டிட வேலை முடிந்த பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்
3. சர்க்கார் நிலத்திலும் பொதுச்சாலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.
4. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் பெறாமல் கட்டட வேலை செய்யக்கூடாது.
5. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டங்களுக்கான உரிமம் புதுப்பித்துக்கொள்ள 100 சதவீதம் உரிமக் கட்டணம் செலுத்தி 15 நாட்களுக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
6. மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கட்டட வேலை செய்ய வேண்டும்.
7. விண்ணப்பதாரர் உரிமத்தையும் வரைபடத்தையும் கட்டடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்.
8. உரிமம் கட்டுப்பாட்டிற்கும் உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும் நகராட்சி சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்டதிட்டங்களுக்கு மாறாக உரிமம் பெற்று இருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.
9. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.
10. கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறிய 15 தினங்களுக்குள் அவ்விவரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன்,கட்டிடத்தின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்பி வைக்க வேண்டும்.
11. கட்டடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை பொதுப்பாட்டையில் விடாமல் உரிமைதாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. மனைப்பிரிவிற்குத் தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்க வேண்டும். இந்த நிலப்பரப்பில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அனைத்து வசதிகளையும் செய்யாததால் வசதிகளைச் செய்ய விகிதாச்சார முறையில் விண்ணப்பதாரர் செலுத்தியுள்ள தொகை வசதிகளைச் செய்ய ஒரு பகுதித் தொகையாகத்தான் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இத்தொகையை போதவில்லையெனில் அதிகமாக இப்பேரூராட்சியில் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.
13. மேற்படி மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனையிட சொந்தக்காரரும் தொகையை செலுத்திய பின்னரே அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலத்திலிருந்து இவ்வசதிகளைச் செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது.
14. சமயலறையில் புகைபோக்கி அமைக்க வேண்டும். முறையான வடிகால் வசதி அமைக்க வேண்டும் . மழைநீர் சேகரிப்பு தொட்டி கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாடு சுகாதார சட்டம் 1930 பிரிவுகள் 26 – 33 ன் படி சான்றிதழ் பெற்ற பின்னரே குடிபுக வேண்டும். அரசு ஆணை (நிலை) எண் .79 நகராட்சியின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துரை (ந.நி.1) நாள் 16. 06. 2000 கீழ் உள்ள விதி முறைகளுக்குட்பட்டு அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும் எனவே அக்கோரிக்கையினை முன்னிருத்தக்கூடாது. நிலக்கரி சாம்பலில் தயார் செய்யப்பட்ட நவீன இரசு செங்கல் கட்டடெத்திற்கு பயன்படுத்த வேண்டும். மேற்படி இடம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் புறவழிச்சாலை பகுதியில் அமைந்துள்ளதாக இருந்தால் இந்த கட்டிட உரிமம் செல்லத்தக்கதல்ல அல்லது ரத்தாகும்.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு, அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் ஒன்று நகல்

பெறுநர்,

திரு/திருமதி : வ.முருகேசன், பே.உதயலட்சுமி

த/பெ,க/பெ : வரதராஜ், முருகேசன் ,

**WD-15**,ஜென் கார்டன்

கூடலூர்


செயல் அலுவலர்
கூடலூர் பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

நகல் : வரி வசூலர், கூடலூர் பேரூராட்சி
( கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக. )



COIMBATORE DISTRICT - GUDALUR TOWNPANCHAYAT

CONSTRUCTION OF RAIN WATER HARVESTING STRUCTURE
RESIDENTIAL BUILDING



COIMBATORE DISTRICT - GUDALUR TOWNPANCHAYAT

CONSTRUCTION OF RAIN WATER HARVESTING STRUCTURE
RESIDENTIAL BUILDING



COIMBATORE DISTRICT - GUDALUR TOWN PANCHAYAT

RAIN WATER HARVESTING

Name: Sivakumar

Asst. No.11961, Ward No.16, R.V Nagar